இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்

ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
ஆணையர்,
சென்னை-34.

பெறுநர்

1) அனைத்து இணை ஆணையர்
2) அனைத்து இணை ஆணையர்/ செயல் அலுவலர்
3) அனைத்து துணை ஆணையர் / செயல் அலுவலர்
4) அனைத்து உதவி ஆணையர் / செயல் அலுவலர்
5) அனைத்து உதவி ஆணையர்

<u>சுற்றறிக்கை ந.க.எண். 29378 / 2015 எம்3 நாள் 13.10.2021</u>

அய்யா / அம்மையீர்,

பொருள்: இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில் அனுபவத்தில் உள்ள புறம்போக்கு நிலங்கள் குறித்து – மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுகளை பின்பற்றி செயல்படுமாறு அறிவுரை வழங்குதல் – தொடர்பாக

பார்வை:
1. இவ்வலுவலக ந.க.எண். 34211 / 2013 எம்3 நாள் 08.04.2014
2. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை எண், 17248/ 2013 மற்றும் 5159/2018 மற்றும் பல வழக்குகள் உத்தரவு நாள் 04.11.2020
3. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை எண். 34496/2012 உத்தரவு நாள் 02.08.2021
4. இவ்வலுவலக ந.க.எண்.29378/2015 எம்3 நாள் 28.09.2021
5. அரசு கடிதம் எண். 10003 /அ.நி.5.2 / 2021-1 நாள் 23.09.2021

---------

தமிழ்நாட்டில் உள்ள முக்கியத் திருக்கோயில்களும், பல சிறு திருக்கோயில்களும், திருக்கோயில் இறைவன்/இறைவி அல்லாது மலைகள் மற்றும் குன்றுகள் மீதும் வனப்பகுதி நிலங்களிலும் அமைந்துள்ளன. திருக்கோயிலும் திருக்கோயிலைச் சுற்றியும் உள்ள நிலப்பகுதியை திருக்கோயில் இறைவன்/ இறைவி பெயருக்கு பட்டா வழங்கினால் பொது மக்கள்/பக்தர்கள்

Verified @ RealEstate™

பயன்பாட்டிற்கு ஏதுவாக அமையும். திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்குவதற்கு தங்கும் கூடங்கள் அமைத்தல், அவர்கள் வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்துவதற்கு வாகன பாதுகாப்பு மையங்கள் அமைத்தல், குளியலறை மற்றும் கழிவறை போன்ற அடிப்படை வசதிகளை செய்தளித்தல் போன்ற பொது நலன் கருதி செய்யப்பட வேண்டிய அத்தியாவசிய மேம்பாட்டு பணிகளுக்கு பிற வகைப்பாடுகளில் உள்ள திருக்கோயில் மற்றும் திருக்கோயிலைச் சுற்றி உள்ள புறம்போக்கு / வனப்பகுதி நிலங்களை திருக்கோயில் இறைவன்/இறைவி பெயரில் பட்டா வழங்கினால் பெரிதும் உதவிகரமாக அமையும்.

எனவே, வருவாய் நிலை ஆணை எண். 26 பத்தி 13 (ii)-ன்படி கோயில் புறம்போக்குகள் திருக்கோயில்களின் பெயரில் அமைந்திடும் வகையில் பட்டா வழங்கிட ஏதுவாக வருவாய்த்துறை அரசு கடிதம் எண். (1டி) 79, வருவாய் நாள் 16.02.1996 கடிதத்தில் பத்தி 4-ல் உத்தரவிடப்பட்டுள்ளதை மறு பரிசீலனை செய்து, திருக்கோயிலைச் சுற்றியுள்ள கோயில் புறம்போக்கு நிலங்களில் திருக்கோயில் மூலம் கட்டடங்கள் ஏதும் கட்டும் பணியினை மேற்கொள்ளக் கூடாது என்ற நிபந்தனையை ஏற்படுத்தி, கோயில் புறம்போக்கு நிலங்களை திருக்கோயில் பெயரிலேயே பட்டா வழங்கிட, நடவடிக்கை மேற்கொண்டு உரிய ஆணை வழங்கிட, ஆவன செய்திட வேண்டுமென ஆணையரால் பார்வைக் குறிப்பு 1 மற்றும் 4-ல் கண்ட கடிதம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

இந்நிலையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை எண். 17248 / 2013 மற்றும் 5159/2018 மற்றும் பல வழக்குகளில் 04.11.2020 அன்று மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் கீழ்க்கண்டவாறு பொதுவான உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

> 22 (i) The temples are entitled to the rights of possession and enjoyment in respect of the respective disputed lands, subject to the control and administration of the HR & CE Department. Needless to suy that no trustee/private individual shall claim right over the disputed lands possessed and enjoyed by the temples in any manner whatsoever.

Verified RealEstate™

(ii) The right and title over the disputed lands vest with the Government. However, the Government shall not utilise/ assign/ transfer the same and construct permanent structures therein for the purposes other then the beneficial interests of the temple as indicated in Rule 13 of the Revenue Standing Order No.26 and the provisions of the HR & CE Act.

(iii) The subject temples under the administration and control of the HR & CE Department, are entitled to all the prescriptive rights not only because of their long possession, but also in view of Rule 13 of the Revenue Standing Order No.26 and the provisions of HR & CE Act.

(c) The HR & CE Department shall take possession of the remaining vacant land and secure it by construction a compound wall at their own cost within a period of six months and utilize it only for the betterment of the subject temple in terms of Rule 13 of the Revenue Standing Order No.26.

(d) If any portion of the property is occupied by any other person, the HR & CE Department shall evict such encroacher in the manner known to law and

(e) The Hr & CE Department shall also take possession of the temple pond and maintain the same for the usage of the temple and its activities.

மேலும், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், வைப்பாமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் பரம்பரை அறங்காவலரால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை எண். 34496/2012-ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் 02.08.2021 அன்று வழங்கப்பட்ட உத்தரவில் பத்தி எண். 5 மற்றும் 6-ல் கீழ்க்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

5) The right and title over the disputed lands vest with the Government. However, the Government shall not utilize/alienate assign/transter the same and construct permanent structures therein for the purposes other than the beneficial interest of the temple as indicated in Rule 13 of the Revenue Standing Order No.26 and the provisions of the Hindu Religious and Charitable Endowments Act.

6) As rightly pointed out by the learned counsel for the petitioner before using the land which is classified as temple poramboke, the respondents 1 to 4 ought to have obtained permission from the fifth respondent as per the Rule 13 of the Revenue Standing Order No.26 and the provisions of the Hindu Religious and Charitable Endowments Act.

7) In view of the above discussion, this Writ Petition is allowed.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மேற்கண்ட தீர்ப்புகளில். இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலுக்குச் சொந்தமான

Verified RealEstate

கோயில் புறம்போக்கு நிலங்கள் நீண்டகால பயன்பாட்டில் இருந்தாலும், வருவாய் நிலை ஆணை எண். 26 மற்றும் அதன் விதி 13 மற்றும் இந்து சமய அறநிலையக்கொடைகள் சட்டத்தின்படியும், பரிந்துரைக்கப்பட்ட உரிமைகளின் அடிப்படையில் நிலத்தை திருக்கோயில் பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும், அதில் நிரந்தரமான கட்டுமானங்கள் கட்டக்கூடாது என்றும், வருவாய்த்துறை பிற பயன்பாட்டிற்கு உட்படுத்தக்கூடாது எனவும், மேலும் திருக்கோயில் புறம்போக்கு நிலத்தை மறுவகைப்படுத்தி (reclassification) பட்டா வழங்க முற்பட்டால் அதற்கு முன்னர், அறநிலையத்துறை ஆணையரின் தடையின்மைச் சான்று பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில் அனுபவத்தில் உள்ள புறம்போக்கு நிலங்களை மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட மேற்கண்ட உத்தரவுகளின் அடிப்படையில் திருக்கோயிலுக்கான உரிமையினை பேணி பாதுகாத்திட வேண்டுமெனவும், மேலும், திருக்கோயில் புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்புகள் ஏதும் ஏற்பட்டிருந்தால் உடனடியாக அதனை அகற்றி திருக்கோயில் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

இச்சுற்றறிக்கை விவரத்தை பின்பற்றி செயல்பட, தங்களது ஆளுகையின் கீழ் உள்ள அனைத்து அறநிறுவனங்களின் நிர்வாகிகள் / செயல் அலுவலர்களுக்கு தெரிவித்திட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இச்சுற்றறிக்கையினை பெற்றுக் கொண்டமைக்கு உடன் ஒப்புதல் வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்,/-ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

/உ.ந.உ.ப./

13.10.2021
கண்காணிப்பாளர்

13.10.2021

Verified @ RealEstate™